Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C.C.NO.168/2010
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.4 , Page.No.74/2023

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சேட்டு | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | ராஜி | தொழில் | ஓட்டுனர் |
| கிராமம் | குருபவானிகுண்டா | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்துர் | வயது | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 7th day of August 2023.

**சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.**

**<u>முதல் விசாரணை</u>.- ( எதிரி சிவா என்னும் சிவக்குமார் மனுவின் பேரில் ஆஜரில் இல்லை )**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் ஓட்டுநராக பணி செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் எதிரி சிவா என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் என்னுடைது தான். 10 அல்லது 13 ஆண்டுகளுக்கு முன்பு தேதி மாதம் நினைவில்லை. நான் நாட்றம்பள்ளி பேருந்து நிறுத்ததில் டெம்போ வைத்துள்ளேன். அங்கு மதியம் நேரத்தில் வந்த போலீசார் என்னிடம் ஒரு கையொப்பம் வாங்கினார்கள். எதற்காக வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னிடம் கூறவில்லை. **எதிரி சிவாவின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக அனுமதி கோரி, அனுமதிக்கப்பட்டதன் பேரில், அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.**

கடந்த 01.04.2010 அன்று இரவு 10.30 மணி அளவில் நாட்றம்பள்ளி காவல் நிலையம் எல்லைக்குட்பட்ட கொத்தூர் செக்போஸ்ட் அருகே போலீசார் வாகன தனிக்கை செய்துக்கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது இருசக்கர வாகனத்தில் வந்த நபர்களை போலீசார் சைகை காட்டி நிறுத்தினார்கள் என்றும், அந்த இருவரும் இருசக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு தப்பி ஓடினார்கள் என்றும், பின்பு அவர்களின் ஒருவரை

பிடித்து விசாரித்தபோது அவர் தனது பெயர் சிவா என்கிற சிவக்குமார் என்றும், தப்பி ஓடியவர் பெயர் முருகன் என்றும் கூறி அதில் சிவா என்கிற சிவக்குமார் பல்வேறு இடங்களில் திருட்டில் ஈடுபட்டதாக ஒப்புக்கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அவ்வாறு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததற்கு சாட்சியாக இருந்து கையொப்பம் செய்து விட்டு தற்போது எதிரியை காப்பாற்ற பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை-**

போலீசார் கேட்டுக்கொண்டதற்கினங்க கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். வேறு எந்த விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் முன்னிலையில் யாரிடமும் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் சரிதான்.

**மறு விசாரணை:** இல்லை.

Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No C.C.NO.168/2010
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.5 , Page.No.74/2023

| | | | |
|---|---|---|---|
| பெயர் | மாயகேசவன் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | குடியன் | தொழில் | டாஸ்மார்க் ஊழியர் |
| கிராமம் | ஆசிரியர் நகர் | மதம் | இந்து |
| மாவட்டம் | திருப்பத்துர் | வயது | 48 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 7th day of August 2023.
சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**<u>முதல் விசாரணை</u>.- ( எதிரி சிவா என்னும் சிவக்குமார் மனுவின் பேரில் ஆஜரில் இல்லை )**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் டாஸ்மார்க்கில் விற்பனையாளராக பணி செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் என்னுடையது தான். சுமார் 10, 12 ஆண்டுகளுக்கு முன் தேதி மாதம் நினைவில்லை. மதியம் நேரம் போலீசார் மேரிமார்க்குளேட் பள்ளி அருகே வரைப்படம் வரைந்தார்கள் அதற்கு நான் மேற்குறிப்பிட்ட கையொப்பத்தை சாட்சியாக இருந்து செய்தேன். அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தாரகள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை-**
போலீசார் கேட்டுக்கொண்டதற்கினங்க கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். வரைபடம் எதற்காக வரைந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதி இருந்தது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை:** இல்லை.